சுருக்கம்

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நெடுஞ்சாலைத்துறை – கருணையடிப்படைப் பணி நியமனம் – காலஞ்சென்ற இளநிலை வரைதொழில் அலுவலர் திரு.வி.கருப்புசெட்டி என்பவரின் மகள் திருமதி.க.நிர்மலா இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016-இன் பிரிவுகள் 15 (ம) 28(2) ஆகியவற்றிலிருந்து தளர்வளித்து பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2டி) எண்.1

நாள் 06.01.2021.
சார்வரி, மார்கழி 22,
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25 கடித எண்.16441/நிர்.1(2)/2002, நாள் 10.08.2020.

---------

ஆணை:-

நெடுஞ்சாலைத்துறையில் ஈரோடு (நெஊப) கோட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொடுமுடி (நெஊப) உட்கோட்ட அலுவலகத்தில் இளநிலை வரைதொழில் அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.வி.கருப்புசெட்டி என்பவர் 04.04.2001 அன்று பணியிடையே இயற்கை எய்தினார். அவரது பணி உதவி வரைவாளர் பதவியில் 28.04.1980 மு.ப முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. மறைந்த அரசு ஊழியரின் மகள் திருமதி.க.நிர்மலா என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி விண்ணப்பம் அளித்ததன் பேரில், அவர் நெடுஞ்சாலைத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 20.12.2018 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். அவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இயற்கை எய்திய நாளில், தனியரின் வயது 18 வருடம் 5 மாதங்கள் ஆகும். தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு

நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் சமர்ப்பித்து தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 20.12.2018 மு.ப. முதல் வரன்முறை செய்திடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 58-ன்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.க.நிர்மலா என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 20.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தனியர் திருமணமானவர் என்பதால் மேற்படி சட்டத்தின் பிரிவு 15 மற்றும் பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க ஏதுவாக பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்த்தி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண். 20916/கியூ2/2020-1, நாள் 19.12.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அ.சா.எண். 34861/ஜி2/2020-1, நாள் 23.12.2020 இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ.கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை - 25.
திருமதி.க.நிர்மலா, இளநிலை உதவியாளர் (நெ),
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25 வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-600018.

**நகல்:-**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-09.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள்துறை, சென்னை-9.
அரசு துணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை-9.
தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
(C.No.7940/HM1/2020)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்